**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய**
**எழுத்துமூல சமர்ப்பனங்கள்(கருத்துகள்)**

அரசியலமைப்புச் சீர்த்திருத்தங்கள் பற்றிய தங்கள் கருத்துகளை எழுத்துமூலம் சமர்ப்பிப்பதற்காக சங்கங்கள்/அமைப்புகள்,அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் என்பனவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை 2016 மே மாதம் 31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அரசியல் அமைப்பு சபையின் வழிபடுத்தும் குழு தீர்மானித்துள்ளது.

எழுத்துமூல பிரதிநிதித்துவங்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வெவ்வேறாக அனுப்பப்படல் வேண்டும்:-

1. **அரசின் தன்மை, இறைமை, சமயம், அரசாங்கத்தின் அமைப்பு ஆகியவற்றின் தன்மை**
2. **தேர்தல் சீர்திருத்தங்கள்**
3. **அதிகாரப் பகிர்வுக் கோட்பாடுகள்**
4. **காணி**

5. **அடிப்படை உரிமைகள்:**

    அடிப்படை உரிமைகள், மொழி உரிமைகள், அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகள், பிரசாவுரிமை;

6. **சட்டத்துறை:**

    சட்டத்துறை, நீதிமன்றங்களின் கட்டமைப்பு, நீதித்துறை மீளாய்வு, அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் உள்ளடங்கலான நீதிமன்றங்களின் நியாயாதிக்கம், அரசியலமைப்பு நீதிமன்றம்;

7. **நிதி:**

    பகிரங்க நிதி, மாகாண நிதி, அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள், மத்திய வங்கி;

8. **சட்டமும் ஒழுங்கும்:**

    சட்டமும் ஒழுங்கும், பொதுப் பாதுகாப்பு, அவசரகாலநிலை;

9. **பகிரங்க சேவை:**

    பகிரங்க சேவை, பகிரங்க சேவை ஆணைக்குழு, மாகாண பகிரங்க சேவை, உள்ளூராட்சி சேவை, மனித உரிமைகள் ஆணைக்குழு

உள்ளடங்கலான சுயாதீன ஆணைக்குழுக்கள், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்);

**10. மத்திய – சுற்றயல் தொடர்புகள்:**

மத்திய அரசு மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், மாகாண நிறைவேற்றுத்துறை ஆகியவற்றுக்கிடையேயான தொடர்பு மற்றும் மத்திய அரசாங்கம், மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் ஆற்றல்கள், நிர்வாகக் கட்டமைப்பு (மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள்)

மேலேயுள்ள ஒவ்வொரு தலைப்புகள் பற்றிய சமர்ப்பிப்புக்களும் வெவ்வேறு ஆவணங்களாக, ஆவணத்தின் முதற்பக்கத்தில் தலைப்பு தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, அனுப்பப்படல் வேண்டும்.

இன்றேல் www.parliament.lk இணையத்தளத்தின் ஊடாக மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்.

சமர்ப்பிப்புக்கள் **2016 மே 31ஆம் திகதி அல்லது முன்னர்** பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்:-

**செயலாளர்,**
**அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழு**
**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

**திரு.நீல் இத்தவல**
**செயலாளர்**
**அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழு**